## திருநெல்வேலி மாநகராட்சி

**2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ம் நாள் செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

1) திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்ததாரரால் முன்வைப்புத் தொகை (ம) பின்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளதனை திரும்ப வழங்கக் கேட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரார் M/s ஆர்.ஆர்.பில்டர்ஸ், திருநெல்வேலி அவர்களால் 05.07.2018–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | வைப்புத் தொகை | தொகை | திருநெல்வேலி மண்டல காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு விபரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 52, ஆசாத் சாலையில் கழிவுநீர் ஓடை அமைத்தல் | EMD | 20000 | 2013-14 P.No.11, 12 |
| | | FSD | 20000 | 2013-14 P.No.11, 12 |
| 2 | வார்டு எண் 47, நாராயணசாமி கோவில் தெருவில் கழிவுநீர் ஓடை அமைத்தல் | EMD | 12750 | 2013-14 P.No.1, 8 |
| | | FSD | 12750 | 2013-14 P.No.1, 8 |
| | | Total | 65,500 | |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள முன்வைப்புத் தொகை (ம) பின்வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/–க்கும் அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல்விதி 7(10)(i)(ii)–ன்படி முன்வைப்புத் தொகை (ம) பின்வைப்புத் தொகை ரூ.65500/– மட்டும் ஒப்பந்ததாரர் M/s ஆர்.ஆர்.பில்டர்ஸ்அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 102

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

2) திருநெல்வேலிமாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 44, கல்லணை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் வகுப்பறை கட்டிடங்கள், அலுவலகக் கட்டிடங்கள், கழிப்பிட கட்டிடங்கள் மற்றும் இதர கட்டிடங்கள் மாநகராட்சியின் கல்வி நிதியிலிருந்து புதிதாக கட்டிடம் கட்டப்பட்டும் மற்றும் பராமரிப்பும் செய்யப்பட்டும் வருகிறது. தற்போது மேற்படி பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் கூட்டஅரங்கம் போன்றவை 2017–18ம் நிதி ஆண்டில் ரூ.782.75 லட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு பராமரிப்பு செய்யப்பட்டு உபயோகத்தில் உள்ளது. மேற்படி கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டப்பட்டதால் மாணவிகளுக்கு இடநெருக்கடி இல்லாமல் நல்ல முறையில் கல்வி பயின்று வருகின்றனர். இந்நிலையில் தலைமையாசிரியர் அவர்கள் தனது 28.11.2019ஆம் தேதிய கடிதத்தில் 4,500 மாணவர்களை கொண்டு பள்ளி சிறப்பாக செயல்பட்டு வருகிறது எனவும், மாநகராட்சியால் கட்டிடம், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளும் சிறந்த முறையில் பராமரிப்பு செய்யப்பட்டு மாணவிகளின் கல்வித் தரமும் மிகச்சிறந்து மேம்பட்டு வருகிறது எனவும், கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டப்பட்ட நிலையில் 11/2018 முதல் 11/2019 முடிய மின்சார கட்டண செலவினம் அதிகமானதால், பள்ளிக்கு கூடுதல் நிதி நெருக்கடி ஏற்பட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கீழ்க்கண்ட விவரப்படி மின்கட்டணம் செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

Service No.006–209–903 11/2018 முதல் 11/2019 வரை ரூ.58179.00
Service No.006–209–179 11/2018 முதல் 11/2019 வரை ரூ.48106.00
Service No.006–210–332 11/2018 முதல் 11/2019 வரை ரூ.8849.00

Service No.006–210–832    11/2018 முதல் 11/2019 வரை ரூ.58492.00

---

மொத்த ம்    ரூ.173626.00

---

மேலும் மேற்கண்ட விவரப்படி 11/2018 மாதம் முதல் 11/2019 மாதம் வரையிலான காலத்திற்கு மின்சார கட்டணம் நிலுவைத் தொகை ரூ.173626/–ஐ கல்லணை பெண்கள் மேல்நிலைப்பள்ளி செலுத்த இயலாத நிலையில் உள்ளதால், மாநகராட்சி நடவடிக்கை எடுத்து மின்சாரம் தடைபடாமல் மாணவிகள் கல்வி பெற உதவிட கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி கல்லணை பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியரின் கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும், மேலும் மேற்படி கட்டண நிலுவைத் தொகை ரூ.173626/–ம் மாநகராட்சியின் கல்வி நிதியிலிருந்து செலுத்தவும், மேலும் இனிவருங்காலங்களில் மாதாந்திர மின்கட்டணத் தொகையினையும் மாநகராட்சியின் கல்வி நிதியிலிருந்து செலுத்துவதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விவரப்படி மாணவிகளின் நலன்கருதி மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து பள்ளி கட்டிடங்கள் கட்டப்பட்டு பராமரிப்பு செய்யப்பட்டு வருவதால், 11/2018 மாதம் முதல் 11/2019 மாதம் வரையிலான காலத்திற்கு செலுத்த வேண்டிய மின்சார கட்டண நிலுவைத் தொகை ரூ.1,73,626/–ம் மாநகராட்சியின் கல்வி நிதியிலிருந்து செலுத்தவும், மேலும் இனிவருங்காலங்களில் மாதாந்திர மின்கட்டணத் தொகையினையும், மாநகராட்சியின் கல்வி நிதியிலிருந்து செலுத்துவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 103

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(கோப்பு எண் இ1/1479/2019–திலி)

---

3) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், திருநெல்வேலி சந்திப்பு பெரியார் பேருந்து நிலையதில் சீர்மிகு நகரம் 2017–18 திட்டத்தின் கீழ் கட்டுமான பணியில் மண்தோண்டும் பணியின் போது சேகரம் செய்துள்ள கனிமத்தினை விலைகொடுத்து பெறும் வகைக்கு 10.12.2019 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு,

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | வைப்புத் தொகை விபரம் | ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.T.சுப்பிரமணியன் 214/1 பூந்தோட்ட தெரு சத்திரம் குடியருப்பு சங்கர் நகர் | ரூ.4200/– சிண்டிகேட் பேங்க் வரைவோலை எண் 341654 நாள் 10.12.2019 | ரூ.4,25,000/– |
| 2 | திரு.பீர்முகம்மது & சன்ஸ் 11A/1 பாவலர் தெரு கயத்தார் | ரூ.4200/– கனரா பேங்க் வரைவோலை எண் 497669 நாள் 10.12.2019 | ரூ.4,20,000/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.T.பாலசுப்பிரமணியன், ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.4,25,000/– ஆனது, மற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையை விடக் கூடுதலாகவும், நிர்ணயிக்கப்பட்ட குறுமத் தொகை ரூ.4,20,000/–ஐ விட ரூ.5,000/– கூடுதலாகவும்

உள்ளதால், திரு.T.பாலசுப்பிரமணியன், ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்ற அனுமதிக்காக

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், திருநெல்வேலி சந்திப்பு பெரியார் பேருந்து நிலையத்தில் சீர்மிகு நகரம் 2017–18 திட்டத்தின் கீழ் கட்டுமான பணியில் மண் தோண்டும் பணியின் போது சேகரம் செய்துள்ள கனிமத்தினை விலை கொடுத்து பெறும் வகைக்கு 10.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.T.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4,25,000/– ஆனது, மற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையை விட கூடுதலாகவும், நிர்ணயிக்கப்பட்ட குறுமத் தொகை ரூ.4,20,000/–ஐ விட ரூ.5000/– கூடுதலாக உள்ளதாலும் திரு.T.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 104

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(கோப்பு எண் இ1/5562/2019–தச்சை)

---

4) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் பி3/4235/2018 நாள் 07.02.2018–ன் படி, இம்மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் – ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2017–18ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணியினை மேம்படுத்தும் வகையில், மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குப்பைகளை சேகரம் செய்து ஒரே இடத்தில் கொண்டு சேர்ப்பதற்கு பதிலாக, அந்தந்த பகுதிகளில் தினந்தோறும் சேகரிக்கப்படும் குப்பைகளை அந்தநந்த பகுதியில் உள்ள பூங்கா திறவிடங்களில் ஒன்று சேர்த்து, உரமாக்கும் பணியினை மேற்கொள்தற்கு நுண் உரமாக்கும் மையங்கள் (Micro Compost Centres) அமைக்கப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகின்றது.

மேற்படி நுண் உரமாக்கும் மையங்களில் (1) குப்பைகளை அரைத்தல் (2) நுண்ணுயிர் திரவம் தெளித்தல் (3) இயந்திரப் பணிகள் மேற்கொள்ளுதல் (4) தொட்டியில் உள்ள குப்பைகளை தினசரி கிளரி விடுதல் (5) உரம் தயார் செய்தல், உரம் காய வைத்தல், சலித்தல் மற்றும் பேக்கிங் செய்தல் போன்ற பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றது. மேலும், மாநகராட்சிப் பகுதிகளில் கழிவுநீர் ஓடை துப்புரவு பணி, பொதுக்கழிப்பிடங்கள் சுத்தம் செய்தல், குப்பை அகற்றும் வாகனங்களில் பணி செய்தல், மண்டல அலுவலகங்கள், மாநகராட்சி கட்டிடங்கள் போன்றவைகளில் பல்வேறு சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான துப்புரவு பணியாளர்கள் இம்மண்டலத்தில் இல்லை. எனவே, பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் பொது சுகாதாரப் பணிகள் பாதிப்பாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

மாநகர மக்களின் பொது சுகாதார நலன் கருதியும், தற்போது பொதுமக்களிடம் திடக்கழிவு மேலாண்மை உபயோகிப்பாளர் கட்டணத்தினை சொத்துவரியுடன் சேர்த்து வசூல் செய்யப்பட்டு வருவதினை கருத்தில் கொண்டும் துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ந.க.8100/J3/2019 நாள் 07.06.2019 தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி முதற்கட்டமாக 233 பணியாளர்களை வெளி கொணர்வு (Out Source) மூலம் அமர்த்திக் கொள்வதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண் M3/16361/2019, நாள் 02.07.2019–ல், 2019–20–ம் வருடத்திற்கு துப்புரவு பணியாளர்களுக்கான ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.359/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் அதற்குண்டான ESI, EPF மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்ட இனங்களையும் உள்ளடக்கி அதன் அடிப்படையில் முதற்கட்டமாக 233 எண்ணம் துப்புரவு பணியாளர்களை ஒரு வருட காலத்திற்கு அமர்த்திக் கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.90 கோடிக்கு நிர்வாக அனுமதியினை நகராட்சி நிர்வாக ஆணையரிடம் பெறப்பட்டுள்ளதால் ஒப்பந்தப்புள்ளி மேல்நடவடிக்கை தொடர மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு, இம்மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் – ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2017–18ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணியினை மேம்படுத்தும் வகையில், மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் குப்பைகளை சேகரம் செய்து ஒரே இடத்தில் கொண்டு சேர்ப்பதற்கு பதிலாக, அந்தந்த பகுதிகளில் தினந்தோறும் சேகரிக்கப்படும் குப்பைகளை அந்தந்த பகுதியில் உள்ள பூங்கா திறவிடங்களில் ஒன்று சேர்த்து, உரமாக்கும் பணியினை மேற்கொள்தற்கு நுண் உரமாக்கும் மையங்கள் (Micro Compost Centres) அமைக்கப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகின்றது. மேற்படி நுண் உரமாக்கும் மையங்களில் (1) குப்பைகளை அரைத்தல் (2) நுண்ணுயிர் திரவம் தெளித்தல் (3) இயந்திரப் பணிகள் மேற்கொள்ளுதல் (4) தொட்டியில் உள்ள குப்பைகளை தினசரி கிளரி விடுதல் (5) உரம் தயார் செய்தல், உரம் காய வைத்தல், சலித்தல் மற்றும் பேக்கிங் செய்தல் போன்ற பல்வேறு பணிகள் மற்றும் நான்கு மண்டலப் பகுதிகளிலும் கழிவுநீர் ஓடை துப்புரவு பணி, பொதுக்கழிப்பிடங்கள் சுத்தம் செய்தல், குப்பை அகற்றும் வாகனங்களில் பணி செய்தல், மண்டல அலுவலகங்கள், மாநகராட்சி கட்டிடங்கள் போன்றவைகளில் பல்வேறு சுகாதாரப் பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான துப்புரவு பணியாளர்கள் இல்லாததால், மாநகர மக்களின் பொது சுகாதார நலன் கருதியும், தற்போது பொதுமக்களிடம் திடக்கழிவு மேலாண்மை உபயோகிப்பாளர் கட்டணத்தினை சொத்துவரியுடன் சேர்த்து வசூல் செய்யப்பட்டு வருவதினை கருத்தில் கொண்டும் துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ந.க.8100/J3/2019, நாள் 07.06.2019 தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி முதற்கட்டமாக 233 பணியாளர்களை இம்மாநகராட்சிக்கு வெளி கொணர்வு (Out Source) மூலம் அமர்த்திக் கொள்வதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண் M3/16361/2019, நாள் 02.07.2019–ல், 2019–20–ம் வருடத்திற்கு துப்புரவு பணியாளர்களுக்கான ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.359/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் அதன் தொடர்புடைய ESI, EPF மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்ட இனங்களையும் உள்ளடக்கி அதன் அடிப்படையில் 233 துப்பரவு பணியாளர்களை ஒரு வருட காலத்திற்கு அமர்த்திக் கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.90 கோடிக்கு நிர்வாக அனுமதியினை நகராட்சி நிர்வாக ஆணையரிடம் பெறப்பட்டுள்ளதால் ஒப்பந்தப்புள்ளி மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 105

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது,

(எச்4/7684/2019)

---

திருநெல்வேலி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கு அம்ரூத் (2016–17) திட்டத்தின் கீழ் புதைவடிகால் திட்டம் (பகுதி–2) (Phase –II) செயல்படுத்துவதற்கு அரசாணை நிலை எண் 111. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA–2), நாள் 25.10.2017 வாயிலாக 289.01 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்துள்ளதின் பேரில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், சென்னை (TNUIFSL) மூலம் 289.01 கோடிக்கு மதிப்பிடப்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கிக்கு பரிந்துரைக்கப்பட்டதில், விரிவான மதிப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் விலைக்குறைபாடுகள் (Physical and Price contingencies) காரணமாக ஆசிய வளர்ச்சி வங்கியின் விதிமுறைகள்படி ரூ.296.11 கோடிக்கு திட்ட மதிப்பீடு திருத்தப்பட்டு, அதற்கான நிர்வாக அனுமதி அரசாணை நிலை எண் 43, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA –2), நாள் 28.2.2019ல் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று பகுதி 3ஐ (Phase III) செயல்படுத்துவதற்கு அரசாணை எண் 5, நகராட்சி நிர்வாகம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA –2), நாள் 22–1–2018 வாயிலாக 381.86 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்துள்ளதின் பேரில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், சென்னை (TNUIFSL) மூலம் 440.19 கோடிக்கு மதிப்பிடப்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கிக்கு பரிந்துரைக்கப்பட்டதில், விரிவான மதிப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் விலைக்குறைபாடுகள் (Physical and Price contingencies) காரணமாக ஆசிய வளர்ச்சி வங்கியின் விதிமுறைகள்படி ரூ.447.75 கோடிக்கு திட்ட மதிப்பீடு திருத்தப்பட்டு, அதற்கான நிர்வாக அனுமதி அரசாணை நிலை எண் 43, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA –2), நாள் 28.2.2019ல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி திட்டம் செயல்படுத்துவதற்கான செலவினம் மற்றும் இயக்கி பராமரிப்பு பணி (O&M) மேற்கொள்ள கீழ்கண்ட விபரப்படி பாதாளச் சாக்கடை சேவைக்கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை திருத்தி நிர்ணயம் செய்யலாம்.

மேற்படி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தினை மத்திய அரசு மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் வளர்ச்சி நிதியத்தின் 01–03–2019ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளப்படி, கீழ்கண்டவாறு புதைவடிகால் இணைப்புகளுக்கு வைப்புத் தொகை மற்றும் சேவைக்கட்டணம் மாநகராட்சி மாமன்றத் தீர்மான எண் 242 மற்றும் 244 நாள் 07–03–2019ன்படி நிறைவேற்றப்பட்டுள்ளது. மாமன்றத் தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளத்தின்படி புதைவடிகால் துணைவிதிகளில் (By-Law) தேவையான திருத்தங்கள் செய்து அவைகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டியிருப்பதால் கீழ்கண்டுள்ளவாறு திருத்தம் மேற்கொள்ளலாம்.

புதைவடிகால் திட்ட துணை விதிகள் (விதி எண்.436)

| வ. எண் | தற்போதுள்ள துணைச் சட்டம் | திருத்தியமைக்கப்படும் உத்தேச துணைச் சட்டம் |
|---|---|---|
| 1 | உபவிதி 5(அ) | உபவிதி 5(அ) |
| | கழிவறையில் இருந்து வெளியேறும் மலக்கழிவு மற்றும் அதனுடன் கலந்துள்ள கழிவுநீர் (black Water) ஆகியவற்றை தனியாகவும், குளியல் அறை, சமையல் அறை, இதர கழிவுநீர் (Gray Water) ஆகியவற்றை தனியாகவும் பிரித்தெடுக்கும் வகையில் குழாய் இணைப்புகள் வீட்டு பகுதியில் அமைக்க வேண்டும். மலக்கழிவு மற்றும் அதனுடன் கலந்துள்ள கழிவுநீர் (black Water) மட்டுமே வீட்டு இணைப்பு மூலம் | கழிவறைகளில் உள்ள மலக்கழிவு மற்றும் அதனுடன் கலந்துள்ள கழிவுநீர் ஆகியவற்றை தனியாகவும், குளியல் அறை, சமையல் அறை, இதர கழிவுநீர் ஆகியவற்றை தனியாகவும் பிரித்தெடுக்கும் வகையில் குழாய் இணைப்புகள் வீட்டு உட்பகுதியில் ஆய்வு தொட்டியில் இரண்டையும் சேர்க்க வேண்டும். பின்னர் ஆய்வு தொட்டியில் இருந்து பாதாள சாக்கடை ஆள் இறங்கு தொட்டிக்கு குழாய் மூலம் இணைப்பதற்கு |

| | | |
|---|---|---|
| | பாதாள சாக்கடை குழாயில் சேருமாறு உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்படவேண்டும். | ஏற்றவாறு கட்டமைப்பு வசதிகள் அமைக்க வேண்டும். |
| | (ஆ) (i) ஒவ்வொரு குடியிருப்பு கட்டிங்களுக்கான புதைவடிகால் சேவை கட்டணம் குடியிருப்புகளுக்கு – ரூ.40 (மாதாந்திரம்)<br>(ii) ஒவ்வொரு வணிகம் மற்றும் தொழிற்சாலைக் கட்டிடங்களுக்கான புதைவடிகால் சேவை கட்டணம்<br>1) வணிக நிறுவனங்கள் ரூ.240<br>2) மருத்துவ மனைகள் ரூ.240<br>3) தொழிற்கூடங்கள் ரூ.240 | ஒவ்வொரு குடியிருப்பு கட்டிடங்களுக்கான புதைவடிகால் சேவை கட்டணம்<br>500 சஅடி வரை – ரூ.100 (மாதாந்திரம்)<br>501 – 1200 சஅடி வரை ரூ 120 "<br>1201 – 2400 சஅடி வரை ரூ.140 "<br>2401 சஅடிக்கு மேல் ரூ.160<br>(ii) ஒவ்வொரு வணிகம் மற்றும் தொழிற்சாலைக் கட்டிடங்களுக்கான புதைவடிகால் சேவை கட்டணம்<br>500 சஅடி வரை – ரூ.300 (மாதாந்திரம்)<br>501 – 1200 சஅடி வரை ரூ 360 "<br>1201 – 2400 சஅடி வரை ரூ.420 "<br>2401 சஅடிக்கு மேல் ரூ.480 "<br>2401 ச.அடி பரப்புக்கு மேல் உள்ள இனங்களுக்கு வைப்புத்தொகை மற்றும் சேவைக்கட்டணம் பரப்பளவுக்கு ஏற்ப அதிகரிக்கப்படும். |

**Under Ground Drainage Revised byelaw**

| Sl.No | Present Auxiliary Act | Proposed Auxiliary Act to be revised |
|---|---|---|
| 1 | Section 48 (A) | Section 48(A) |
| | 1).Collection of deposits for the provision of Under Ground Sewerage system :<br>(i) For each house service connections for Domestic purpose – Rs.5000/-<br>(ii) For each house service connections for Non-Domestic, Commercial, Industrial and all other Residuary purpose – Rs.10000- | 1).Collection of deposits for the provision of drinking water supply:-<br>(i) For each house service connections for Domestic purpose – Rs.7500-<br>(ii) For each house service connections for Non-Domestic, Commercial, Industrial and all other Residuary purpose – Rs.15000- |
| | (B) 2) UGSS Service charges :-<br>for Domestic use Rs.40/-<br><br>(2) Non-Domestic use:<br>Commercial Rs.240<br>Hospital Rs.240<br>Industrial Rs.240 | 2. UGSS Service charges:-<br>for Domestic use<br>Upto 500 sqft of plinth area asst<br>Rs.100/- p.m.<br>501 – 1200 sq.ft Rs.120/- "<br>1201 – 2400 sq.ft. Rs.140/- "<br>2401 and above Rs.160*<br><br>For Non Domestic Use:<br>Upto 500 sqft of plinth area asst<br>Rs.300/- p.m.<br>501 – 1200 sq.ft Rs.360/- "<br>1201 – 2400 sq.ft. Rs.420/- "<br>2401 and above Rs.480*<br>*This is the base rate for the plinth area of 2401 sq.ft. The deposit and tariff for plinth area above 2401 sq.ft. have to be |

| | | |
|---|---|---|
| | | increased in proportion to the increase in plinth area. |

(ந.க.எண் இ1/1 1473/2015)